தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை-6

மலர் 4 | சென்னை | 31-5-58 | சனிக்கிழமை | இதழ் 46

துயில் கொண்ட தலைவர்!

சில ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்நாட்டு அரசியலில் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தலைவரைப்பற்றி, எதிர்க் கட்சியைச் சேர்ந்த வேறொரு தலைவர் அவருடைய பத்திரிகையில் கடுமையாகத் தாக்கி எழுதிவிட்டார். உடனே தாக்கப்பட்டவருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர், எழுதியவர்மீது வழக்குப் போட்டார். இன்றைய தினம் உயர்ந்த உத்தியோகத்தில்இருக்கும் ஒரு வக்கீலை அமர்த்தி தனக்காக வாதாடும்படியும் ஏற்பாடு செய்தார். பத்திரிகையில் எழுதியவரும் ஒரு வக்கீல். ஆகவே, அவர், தன்மீது தொடுக்கப்பெற்ற வழக்கைத் தோற்கடிப்பதற்காக தானே வாதாடத் தீர்மானித்தார். வழக்கு நடந்தது. தமிழர்கள் அந்த வழக்கின் நடவடிக்கைகளையும் வாதப் பிரதிவாதங்களையும் கூர்மையாகக் கவனித்து வந்தார்கள். வழக்கின் முடிவு, பத்திரிகையில் எழுதியவருக்கே சாதகமாக முடிந்தது. வழக்குப்போட்டவர்பெரிய தலைவர், பெரிய வக்கீல், அவர் வாதாடமுடியாமல் மிகப் பெரிய ஒரு வழக்கறிஞரை தனக்காக அமர்த்திக்கொண்டார். பத்திரிகையில் எழுதியவரோ, ஒரு சாதாரண வக்கீல், ஒரு சிறிய கட்சியின் தலைவர், அவரே நீதிமன்றத்தில் வாதாடினார். வழக்கு எளியவர் பக்கமே வென்றது.

—இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட மூவருடைய பெயர்களையும் இங்கே குறிப்பிட்டால் தமிழகம் நிச்சயமாக ஆச்சரியப்படும். திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரும், சென்ற கிழமை திடீரென்று இயற்கை யெய்தியவருமான 'சண்டே அப்சர்வர்' பி. **பாலசுப்ரமணியம்** அவர்கள் ஒரு முறை **ஆச்சாரியாரைக்** கண்டித்துப் பத்திரிகையில் எழுதிவிட்டார். ஆச்சாரியார் பி. பா. அவர்கள் மீது வழக்குத்தொடுத்தார். பி. பா. அவர்கள் தனக்காக தானே வாதாடினார். ஆச்சாரியார் சிறந்த வக்கீலாக இருந்தும் அவருடைய வழக்கை அவர் மேற்கொள்ளவில்லை. இன்று அட்வகேட் ஜெனரலாக இருக்கும் **திருவேங்கடாச்சாரி** அவர்களை ஆச்சாரியார் வக்கீலாக அமர்த்திக்கொண்டார். என்றாலும் வெற்றி நமதுபாலசுப்ரமணியம் அவர்களுக்குத்தான் கிடைத்தது. அத்தகைய ஆற்றல் பெற்ற ஒரு வழக்கறிஞரை, தலைவரை திராவிட இயக்கம் இழந்துவிட்டது. பி. பா. அவர்கள் நீதிக் கட்சி காலத்திலிருந்து தென்னாட்டு மக்களுக்கு உழைத்ததை நாடு மறப்பதற்கில்லை. நெஞ்சில் பட்டதை அப்பட்டமாக எடுத்துரைப்பதில் அவருக்கு நிகர் அவரேதான். யாருடைய முக விலாசத்திற்கும் அவர் பயந்ததில்லை. தன்னுடைய கருத்திற்கு ஒவ்வாத காரியத்தை யார் செய்தாலும், யார் பேசினாலும், அவர்கள் ஆளுகிற கட்சியின் உயர்ந்த பதவியிலிருந்தாலும்கூட பி. பா. அவர்கள் பயப்படுவதில்லை. அவர்களை போனில் கூப்பிட்டுக் கண்டிக்கும் 'சுபாவம்' கொண்டவர். இன்றையக் காங்கிரஸ் தலைவர்கள் பலர், உரிமையின்பேரில் அவரிடம் 'பேச்சு' வாங்கியவர்களாவார்கள். ஆங்கிலத்திலே பேசுவதிலே பேராற்றல் பெற்ற பி. பா. அவர்களை, டில்லிபாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க அரும்பாடுபட்ட திராவிடம் வெற்றி பெற முடியாமற் போனது நினைத்து நினைத்து வருந்தக்கூடியதாகும்.

பொதுத் தேர்தல் காலத்தில் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், பி. பா. அவர்கள் இறந்துவிட்டதாகத் தவறான செய்தியை வேண்டுமென்றே நகர் முழுதும் பரப்பினார்கள். அதுபற்றி பி. பா, அவர்கள் சென்னையில் பேசியதை சென்னை என்றும் மறப்பதற்கில்லை. அது இது :—

என்னுடைய மகத்தான தலைவர் அண்ணாவும் ஆச்சாரியாரும் சமீபத்தில் சந்தித்துப் பேசியதைப்பற்றி பலர் பலவிதமாகப் பேசிக்கொள்கிறார்கள். அண்ணாவை, சி. ஆர். விழுங்கிவிடுவார் என்றும் சொல்கிறார்கள். யார் யாரை விழுங்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்துப் பார்த்தால்தானே சொல்லமுடியும்.''

''நான் இன்று, உங்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக இங்கு வந்தேன். உங்களுக்கு என்றால், எனக்கும் என்னுடைய கட்சிக்கும் ஓட்டுப் போட்ட ஓட்டர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக வந்தேன். அப்படியானால், எதிர்த்து ஓட்டுப் போட்டவர்களுக்கு நன்றி தெரிவிப்பது நாகரிகமல்லவா, என்று நீங்கள் வினவலாம்; உண்மை. அவர்களுக்கும் நான் நன்றி செலுத்தத்தான் வேண்டும்; ஆனால் உயிருடன் இருப்பவர்களுக்குத்தானே என்னால் நன்றி செலுத்தமுடியும்! செத்துப்போனவர்களுக்கு காங்கிரஸ்காரர்கள் தேர்தல்

— 3-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 4 ‖ 31—5—58 ‖ இதழ் 46

பாலாற்றில் நீரோடுமா?

செங்கற்பட்டு, வ. ஆ. மாவட்டங்களின் விவசாயவளம், அந்த இரு மாவட்டங்களையும் அணைத்துக்கொண்டு ஓடும் பாலாற்றின் நீர்வளத்தைப் பொறுத்தது. அந்த ஆறு சில ஆண்டு காலமாக தண்ணீரில்லாமல் வறண்டு கிடக்கிறது. மைசூர் மாநிலத்தில் உற்பத்தியாகும் இந்த ஆறு, அந்த மாநிலத்தில் 47 கல் அளவும், வ. ஆ. செங்கற்பட்டு மாவட்ட நிலப் பரப்பில் 183 கல் அளவும் ஓடிவருகிறது. அதில் ஓடும் நீரை, மைசூரும் சென்னையும் எந்த அளவு பயன்படுத்திக்கொள்வது என்பதுபற்றி 1892ல் ஒரு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கையை மைசூர் சர்க்கார் மீறிவிட்டதாகக் கருதியவர்கள் கீழ்க்காணும் குற்றச்சாட்டுகளை மைசூர் சர்க்கார்மீது சாட்டினார்கள்.

★ பெத்தமங்கலம் ஏரியை உயர்த்திக்கொண்டது.

★ ஏரிக்குக் கீழே ஒரு அணைக்கட்டைக் கட்டிக்கொண்டது.

★ ஆறு புதிய ஏரிகளை வெட்டிக்கொண்டது.

★ விவசாயிகளுக்கு அளவுக்கு மீறி தண்ணீரை உபயோகித்துக் கொள்ள அனுமதி தந்தது.

—இந்தக் குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்கு அதிகாரிகள் மட்டத்தில் கூடிய விசாரணைக்குழு அன்று பரிசீலனை செய்தது.

பரிசீலனை செய்தவர்களின் கருத்துரை என்ன?

கரை உயர்த்தப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது;

மைசூர் சர்க்கார் அதிகத் தண்ணீர் உபயோகித்தது கோலார் தங்க வயல் 'தீவிழா'க்களை அணைப்பதற்கேயன்றி வேறு எதற்கும் அல்ல;

மைசூர் சர்க்கார் புதிய அணையைக் கட்டியிருக்கிறார்கள். அந்த அணை, ஒப்பந்தத்திற்குமுன் கட்டியதா, பின் கட்டியதா என்று ஆராயவேண்டும்;

புதிதாகக் கட்டிய ஏரிகள் பெரியவையல்ல. 2 ஏக்கராவுக்குமேல், 4 ஏக்கராவுக்குள் சாகுபடி செய்யத்தான் அந்த ஏரி பயன்படும்;

ஆகவே மைசூர் சர்க்கார் ஒப்பந்தத்தை மீறியது என்று சொல்ல முடியாது.

—இவ்வாறு நிபுணர் குழு முடிவு கூறியது.

1956ல் நடைபெற்ற இந்த விசாரணை பற்றி 1958 வரை சென்னை சர்க்கார் வெளியில் கூறவில்லை. தி. மு. க. சட்டமன்றம் புகுந்து இதுபற்றிய பிரச்சினையைக் கிளப்பியபின் இந்த விபரங்களைச் சர்க்கார் வெளிப்படுத்தியது.

மே மாதம் 8ம் தேதி டில்லியில் நடைபெற்ற நீர்ப்பாசன மாநாட்டில் கலந்துகொண்டு பேச இருந்த நமது பாராளுமன்ற உறுப்பினர். ஈ. வி. கே. சம்பத் அவர்கள், 1956ல் விசாரணை நடத்திய நிபுணர் குழுவின் தீர்ப்பு விபரத்தைக் கேட்டபின், முதல்நாள் இரவு அவரது இல்லத்துக் கதவைத் தட்டி விபரங்களைக் கொடுத்தது சர்க்கார்.

அந்த விபரங்களை வைத்து நமது சம்பத் அவர்கள் நீர்ப்பாசன மாநாட்டில் பேசினார்கள். பாலாற்றுப் பிரச்சினையில் மைசூர் சர்க்கார் மீறியதா இல்லையா என்பது பிரச்சினை அல்ல, இரண்டு மாநிலங்களும் பயன்பெறும் முடிவுகளைத் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அமைச்சர்கள் கலந்தாலோசிக்க வேண்டும் என்று சம்பத் அந்த மாநாட்டில் எடுத்துரைத்தார். மத்திய அமைச்சர்களும் சம்பத் அவர்களின் யோசனையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் கூடுமான வரை மிக விரைவில் அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி ஒரு நல்ல முடிவு காண முயலவேண்டும். பாலாறு, தண்ணீர் ஓடாத ஆறு என்று கெட்ட பெயரை காங்கிரஸ் சர்க்கார் மாற்றுமானால், அதுவே தமிழ்நாட்டுக்குப் பெருந் தொண்டாகும்.

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

காலத்திலே மட்டும் உயிர் கொடுத்து ஓட்டர்களாக்கினார்கள். பிணங்களுக்கு என்னால் எப்படி நன்றி கூறமுடியும்!"

"முஸ்லீம் லீக் தலைவர் முகமது இஸ்மாயில், அவர்கள் என்னை எதிர்த்து நின்ற எச். டி. ராஜா அய்யருக்கு ஓட்டுப் போடச் சொல்லியிருந்தும், முஸ்லீம்கள் பெருவாரியாக, எனக்கு ஓட்டளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிறிஸ்தவர்களில் கணிசமான அளவுக்கு எனக்கு ஓட்டுப் போட முன் வராததற்குக் காரணம், அவர்களிடத்திலே நான் பங்கு கொண்டுள்ள தி. மு. கழகம் ஒரு நாஸ்திக இயக்கம்என்ற தவறான கருத்து பரப்பப்பட்டதேயாகும். இதை மறுத்து விளக்க எங்களுக்குப் போதுமான பிரசார வசதி இல்லாமலிருந்தது; உண்மையிலேயே நாங்கள்தான் சிறந்த ஆஸ்திகர்கள். மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு ஆண்டவனை பங்காளியாக்காத ஒரு பாவத்தைத் தவிர வேறெந்த பாவமும் நாங்கள் செய்ததாகத் தெரியவில்லை.

"இன்று சட்டப்படி நான் தோற்றுவிட்டிருந்தாலும் கூட, 'ஆத்மார்த்தி'கமாக நான்தான் வெற்றி பெற்றிருக்கிறேன். நான் பெற்ற வெற்றி பணம்கொடுத்து வாங்கப்பட்ட ஓட்டுக்களின் அடிப்படையில் கணக்கெடுக்கப்பட்டது. நான் தோற்றுப்போன மறுநாள், எனது விரோதிகளால் நான் இறந்துவிட்டேன் என்று ஒரு வதந்தி கிளப்பிவிடப்பட்டது. அது என்னை துன்பத்திலாழ்த்தும் என்று அவர்கள் கருதினார்கள் போலும்! ஆனால் மாறாக, அது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. நான் இறந்துவிட்டால் எனது சவ ஊர்வலத்திற்கு எத்தனை ஆயிரம் மக்கள் வருவார்கள் என்பதை நான் உயிருடன் இருக்கும் போதே-எனது இரு கண்களால் பார்த்தேன்! அழுத கண்களும், சிந்திய மூக்குமாக, ஆயிரமாயிரவர் என் குடில்நோக்கி ஓடிவந்த காட்சி, கல்னெஞ்சையும் இளகச் செய்துவிட்டிருக்கும். என் மீது மக்கள் கொண்டுள்ள மகத்தான அன்புக்கு இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்!

"காங்கிரசார் இதுபோன்ற மிகஇழிந்த செயல்களில் இறங்கி சில பல சமூக விரோதிகளின் துணைகொண்டு வெற்றிபெற்றனர். அது எப்படி உண்மையான வெற்றியாக முடியும்!"

–பேச்சை படிக்கும்போதேகண் கலங்குகிறது. நன்றாக இருந்த இயக்கம் வளர்ந்து, மரமாகி, பூத்துக் காய்த்துக் கனி தரும் வேளையில் பி. பா. அவர்கள் மறைந்தார்கள். சாவின் அரக்கச் செயலுக்கு இது தலையாய சான்று.

தென்னாற்காடு மாவட்ட

தி. மு. க. 3-வது மாநாடு

1958 ஜூன் 7, 8-ஆம் நாட்களில்

விருத்தாசலத்தில்

நடைபெறும்.

★

தலைவர்: **மதுரை-எஸ். முத்து**

திறப்பாளர்: **கே. கே. நீலமேகம்**

அண்ணா, பொதுச் செயலாளர் **நெடுஞ்செழியன்**

மற்றும் கழக முன்னணி வீரர் கலந்துகொள்வர்.

★

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.,
வரவேற்புக் குழுத் தலைவர்.

எம். செல்வராஜ் எம். எல். ஏ.,
பொருளாளர்.

சி. முனுசாமி, ஜி. சொக்கலிங்கம், சி. நடராசன் எம். எல். ஏ.,
எம். ஆனந்தன் எம். எல். ஏ.—செயலாளர்கள்.

தொ. பிச்சமுத்து, பா. குப்புசாமி—
தொண்டர் படைத் தலைவர்கள்.

கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

உறையூர்

16-5-58 தேதி மாலை உறையூர் தி. மு. க. சார்பில் தோழர் பெ. தாமோதரன் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. **மதுரை எஸ். முத்து, எம். எஸ். மணி** ஆகியோர் பேசியபின், ஆசிரியர் **கண்ணதாசன்,** கம்யூனிஸ்டு கட்சியின் கொள்கைகள் இந்த நாட்டில் அமைதியை உண்டாக்கும் வகையில் அமையவில்லை என்பதற்கான சான்றுகள் காட்டி விளக்கிப் பேசினர்.

குரும்பலூர்

17-5-58 ம் தேதி மாலை 6 மணிக்கு தோழர் பா. குணசேகரன் தலைமையில் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெற்றது. திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும், காங்கிரஸ் இயக்கத்தின் ஆட்சிநிலை பற்றியும் ஆசிரியர் **கண்ணதாசன்** எடுத்துரைத்தார்.

காவேரிநகர்

அன்று இரவு 8 மணியளவில் புதுக்கோட்டை அடுத்த காவேரி நகரில் மேதின விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நடைபெற்ற தொழிலாளர் கூட்டத்திற்கு தோழர் மு. வே. சாமி தலைமை வகித்தார். தோழர்கள் தமிழழகன், க. ஞானமுத்து ஆகியோர் பேசியபின், ஆசிரியர் **கண்ணதாசன்** நீண்ட உரையாற்றினர். கூட்ட முடிவில் கம்யூனிஸ்ட்டுத் தோழர்கள் கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதிலிறுத்தார்.

புதுக்கோட்டை

இங்நகர் அச்சுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் முதலாண்டு விழாப் பொதுக் கூட்டம் 18-5-58 ம் தேதி ஞாயிறன்று திலகர் திடலில் நடைபெற்றது. தோழர். கே. வி. சுப்பையா அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். மதுரை எஸ். முத்து, எம். எஸ். மணி, எஸ். ஜி. கிருஷ்ணன் ஆகியோர் தொழிலாளர் உரிமை பற்றியும், கடமை பற்றியும் எடுத்துரைத்தார்கள். இறுதியாக ஆசிரியர் கண்ணதாசன் அரசியல் நிலை குறித்து விளக்கிப் பேசினர். இரவு 7 மணிக்குத் துவங்கப்பெற்ற கூட்டம் 11-30 மணி வரை நடந்தது. இருபதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

மாலை 6 மணிக்கு புதுக்கோட்டைக் கல்லூரி வாசலிலிருந்து ஆசிரியர் கண்ணதாசன், மதுரை முத்து, தென்னரசு, எம். எஸ். மணி ஆகியோர் மோட்டாரில் வைத்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்கள். நகரில் பல இடங்களில் ஆசிரியர் கண்ணதாசன் கொடியேற்றிவைத்தார்.

கூட்ட முடிவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

புதுக்கோட்டை அச்சுத்தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் 4-8-57 தேதிய பொது மகாசபைத் தீர்மானத்தின்படி சென்னை அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அச்சுத்தொழிலாளர்கட்கு குறைந்தபட்ச சம்பளம், வேலைநேரம், விடுமுறைகள் இதர வசதிகள் சம்பந்தமாக சட்டம் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கும் முடிவை இந்த ஆண்டு விழா சென்னை அரசாங்கத்தை பாராட்டுவதுடன் இந்த சட்டத்தை தொழிலாளர்கட்கு விரைவில் கொண்டு வரும்படி வற்புறுத்துவதுடன் இதன் நிர்ணய கமிட்டியில் தமிழ்நாடு (சென்னை ராஜ்யம்) அச்சுத் தொழிலாளர்களின் பிரதிநிதியாக க. அன்பழகன், கலைஞர். மு. கருணாநிதி ஆகியோரை நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

2. பிராவிடண்ட் பண்ட் சட்டத்தை ஐம்பது தொழிலாளர்கட்குக் குறைவாக இருக்குமிடங்களிலும் பாக்டரி இல்லாத தொழில்துறைகளுக்கும் அச்சுத்தொழிலில் ஈடுபட்டுள்ள எல்லாத் தொழிலாளர்கட்கும் மேலே கண்ட சலுகை கிடைக்கும்படி சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென அரசாங்கத்தை இந்த ஆண்டு விழா கேட்டுக்கொள்கிறது.

3. வீடு கட்டித்தரும் திட்டத்தை சென்னை அரசாங்கம் அச்சுத்தொழிலாளர்கட்கும் விஸ்தரிக்கும்படி இந்த ஆண்டுவிழா சென்னை அரசாங்கத்தை வற்புறுத்கிகிறது.

4. தமிழ்நாடு (சென்னை ராஜ்யம்) முழுவதுமுள்ள அச்சுத்தொழிலாளர்களின் குறைகளை கண்டறிய ஒரு முக்கூட்டு கமிட்டியை நியமித்து தமிழ்நாடு முழுவதும் அச்சுத்தொழிலாளர்கட்கு ஒரே விதமான சம்பள நிர்ணயத்தைக் கொண்டுவரும்படி அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

5. சென்னை அரசாங்கம் தமிழ்நாடு (சென்னை ராஜ்யம்) முழுவதும் தற்சமயம் இருந்துவரும் அச்சுத்தொழிலை பாதுகாக்கவும், வளர்க்கவும் கீழ் கண்ட வழிகளை சட்ட ரூபமாகவோ அல்லது உத்தரவு மூலமாகவோ நிலை நிறுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

6. சென்னை அரசாங்கம் ஸ்தலஸ்தாபனங்கள் ஆகியவைகள் சம்பந்தப்பட்ட சகல அச்சுவேலைகளையும் சென்னை ராஜ்யத்திலுள்ள அச்சுக்கூடத்தில் தான் தயாரிக்க வேண்டும். இந்த வேலைகளை அரசாங்கம் கட்சி வேறுபாடின்றி பாரபட்சமற்ற முறையில் இவ்வேலைகளை கொடுத்து வரவேண்டும்.

7. சென்னை ராஜ்யத்திலுள்ள அனைவரும் அச்சுவேலைகளை சென்னை ராஜ்யத்திலுள்ள அச்சுக்கூடங்களில்தான் தயாரிக்க வேண்டுமென்று சென்னை அரசாங்கம் கட்டுப்படுத்த வேண்டும்.

8. சென்னை ராஜ்யம் தவிர இதர ராஜ்யங்களில் குறிப்பாக வட இந்தியா பகுதிகளிலிருந்து வரும் அச்சுவேலைகளை தென்னக அச்சுத்தொழில் துறை முன்னேறும் வரை தடைசெய்ய வேண்டும்.

9. அச்சக உரிமையாளர்கட்கும் அரசியல் சுதந்திரம் கொடுத்து அச்சுத்தொழிலை வளமாக்கவேண்டும்.

10. அச்சுத்தொழிலுக்கு சென்னை அரசாங்கம் கடன் உதவியைப் பாரபட்சமின்றி கொடுத்துத் தொழிலை பாதுகாக்க வேண்டும்.

மல்லிகைப் பூச்செண்டு !



தாலாட்டு என்பது தமிழ்நாட்டு கிராமத் தாய்மார்களிடம் சிறப்பாயமைந்துள்ள ஒரு சொத்து. உவகையின் மேலீட்டால் உள்ளத்தில் ஊறும் கவிதைச் சுரங்கம் தாய்மார்களிடம் இயற்கையாக அமைந்துவிடுகிறது. இலக்கண வரம்பை அறியாதவர்கள் தான்! ஆனல் பொருளாழமும் சொல்லழகும் நிறைபடப் பாடுவார்கள். குழந்தைகள் உள்ள எல்லா வீடுகளிலும் இரவு பகல் எந்த நேரமானலும் ஒலிக்கத் தவறுவதில்லை. அன்பு மனங்கொண்டு, அழகு தமிழில் எவ்வளவு நேரமானலும் பாடி உறங்5 வைப்பதில் தயங்குவதில்லை.

ஒரு கிராமத்தாய், தன் குழந்தைக்கு நீராட்டி, பொட்டிட்டு, தலை சீவி, அமுதூட்டி, தூங்காத கண்ணுக்கு துரும்பு கொண்டு மையெழுதி, தொட்டிலிலே போட்டு உறங்க வைக்கும் விதத்தை இங்கே பார்ப்போம்.

கொட்டி வைத்த முத்தே!
குவித்து வைத்த ரத்தினமே!
கட்டிப் பசும் பொன்னே!
கற்கண் டேகண் வளராய்!

தன் குழந்தைக்கு எதையெதை உவமையாகக்கூறுகிருள் பாருங்கள். முத்துக் குவியலாம்! ரத்தினக் குவியலாம்! பசும் பொற்கட்டியாம்! கற்கண்டாம்! பிள்ளைப் பாச மிகுதியால் உயர்த்திக் கூறுகிருள்.

நூற்றுக் கல முத்திலே
தூற்றி யெடுத்த முத்தே!
மாற்றுயர்ந்த பொன்னே—இந்த
மண்ட லத்து அதிபதியே!

நூறுகல முத்திலே தூற்றியெடுத்த ஒரு முத்தாம்! உலகத்திற்கே தலைவனும்! எவ்வளவு உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கிறதுஅவளுடையகற்பனை!

பத்து மலை கடந்து
பறித்து வந்த அதிசயப்பூவே!
கொத்து மருக் கொழுந்தே!
கோமள மேகண் வளராய்!

பத்து மாதங்கள் சுமந்து பெற்றதை பத்து மலைகள் கடந்து வந்ததாக ஒப்பிட்டுக் கூறுகிருள். இந்தப் பிள்ளைக்கனியமுது பிறந்திருக்காவிட்டால் குடும்பத்திற்கு மாசு ஏற்படுமாம்! மலடி என்று ஏசுவார்களாம்! மலடி என்ற சொல்லை மாற்றியமைக்கப் பிறந்தானும் தன் மழலைச் செல்வன்!

மலடி மலடி என்று
மாநி லத்தார் ஏசாமல்
மலடி என்ற சொல்லை
மாற்றப் பிறந் தாயோ!
கிள்ளைக் குயில் மொழியே!
செல்லக் கனி யமுதே!
பிள்ளைக் கலிதீர்க் கவந்த
பெம்மா னேகண் வளராய்!

இவ்வளவும் பாடியபின் உறங்கின பாடில்லை. கைகால்களை உதைத்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டான். ஏன் அழவேண்டும்? யாரும் அடித்தார்களா? அடித்தவர்களைக் கேட்கின்ருள்.

மாமி அடித் தாளோ
மல்லிகைப் பூச்செண் டாலே
பாட்டி அடித் தாளோ
பாலூட் டும்கை யாலே

கையால் அடித்தால் நொந்து போவானும்! பூச்செண்டால் அடிப்பதற்கேற்ற மிருதுவான மேனியாம்! ஒருவராலும் அடி பெருமல் வளர வேண்டுமாம்! நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்து வரும் தாயல்லவா! ஆனல் அழுகையோ நிற்கவில்லை. மாமன்மார்கள் வராததால்தான் அழுகிருன் என்று காரணத்தைக் கண்டுபிடித்துவிடுகிருள். அதனல் சகோதரர்களின் நிலையும் உயர்த்தப்படுகிறது. பிறந்த இடத்தை உயர்த்திக் கூறுவது பெண்களின் இயற்கைக் குணம் தானே!

துறை முகத்து வியாபாரி
துரைமார்கள் உங்க ளம்மான்
திரை கடல் கடந்து
தேடி வருவார் உங்களம்மான்
சின்னஞ் சிறு விரலுக்கு
சித்திரம் போல்மோ திரங்கள்
பொன்னு லுனக்கு அளிப்பார்
புண்ணி யனே கண்வளராய்!

மாமன்மார்கள் வருவார்கள் என்று சொன்னவுடன் மகிழ்வு உண்டாகிவிட்டதுபோலும். பின் உறங்காமலிருப்பானு! அமைதியாக உறங்க ஆரம்பித்தான்.

வாடாத புது மலர் மேனியில் வாடைக் காற்று படக்கூடா தென்று மெல்லிய துணியால் போர்த்திவிட்டு, கவலையின்றி உறங்கும் களங்கமற்ற முகத்தை மறுபடியும் பார்த்துவிட்டு வேலைகளைக் கவனிக்கச் செல்கிருள். இதை நினைக்கும்பொழுது நாமெல்லாம் குழந்தைகளாக இல்லையே என்ற கவலை நம்மைச் சூழ்கிறதல்லவா?

-ப. குருதேவன்

- 26 -

அத்திப்பழம்

மா. கி. தசரதன், எம். ஏ.

அவன் மெல்ல மெல்ல அடியிட்டு வந்து அவள் பக்கத்தில் நின்ருன்.

அவள் பேசுவாள் என எதிர்பார்த்தான்.

அவள் பேசவில்லை.

அவள் பால் தருவாள் என எதிர்பார்த்தான்.

பாலும் எடுத்துத் தரவில்லை.

அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். முகவாயில் கை வைத்து அந்த முகத்தை உயர்த்தினுன். கண்கள் குளமாக இருந்தன. விம்மல் ஒலி கேட்டது. அவள் கைகள் நடுங்கின; உடலும் ஆடியது.

மெல்ல அவன் தோள்மீது சாய்ந்தாள்.

தலையைக் கோதியவாறு "ஏன் அழுகின்ருய்" என்று கேட்க வாயைத் திறந்தான்.

சொற்கள் வரவில்லை; அழுகை தான் வந்தது.

இரண்டு பேரும் அழுதனர். வெளியில் யாருக்கும் கேட்காதவாறு அடக்கி அடக்கி அழுதனர். அவள் கைகளால் அவன் கண்ணீரைத் துடைத்தாள். ஒரு கன்னத்தைப் பிடித்துக்கொண்டு

"இனி அழக்கூடாது" என்று அழுதுகொண்டே சொன்னுள்.

அவன் அவள் கண்ணீரைத் துடைத்தான். "இனி அழவில்லை" என்பதுபோல் அவள் தலையையாட்டினுள்.

துணை மலர்ப் பிணையல் ஆயினர் இருவரும். இறுக்கம்—நெறுக்கம்.

எவ்வளவு நேரம் கடந்ததோ கணக்குத் தெரிய வழி இல்லை.

விடியற்காலை இருக்கும், இருவரும் விழித்திருந்தனர்.

எங்கோ இரண்டு காக்கைகள் கரைந்தன.

அவள் எழுந்தாள்.

அவன் பிடித்து இழுத்து நிறுத்தி "எங்கே?" என்ருன்.

"உள்ளே" என்ருள்.

"இரு" என்ருன். இருந்தாள்.

"ஏன் அழுதாய்?"

"என்னமோ அழுகை வந்தது அழுதேன்."

"அப்படிச் சொன்னுல் நம்ப மாட்டேன். என்னைப் பிடிக்கவில்லை. அதுதானே?"

"நான் ஒன்றும் அப்படிச் சொல்லவில்லை."

"பின் ஏன் அழுதாய்."

"என்னமோ அழுதேன்."

ஞானசம்பந்தனின் முகம் கோபத்தைக் காட்டியது. மங்கிக் கொண்டிருந்த விளக்கொளியில் அதைக் கண்டாள்.

"ஒன்றும் இல்லை" என்ருள்.

"சரிதான்" என்ருன் கடுகடுப்பாக. சற்று நேரம் அமைதி நிலவியது. ஞானசம்பந்தனே பேச்சைத் தொடங்கினுன்:

"நான் சொல்லட்டுமா?" என்ருன். அவள் ஒன்றும் பேசவில்லை.

"நான் கெட்டுப் போனவன் என்றுதானே அழுதாய்?"

குனிந்திருந்த அவள் நிமிர்ந்தாள். கண்களில் வியப்பு நிலவியது. ஆனுல் ஒன்றும் பேசவில்லை.

"அதுதான் காரணம். ஆமாம் நான் கெட்டுப் போனவன்தான். உன்னிடத்திலே சொல்லித்தானே ஆகவேண்டும். அமுதவல்லி—நீ பார்த்தாயா அவளை என்ருன் இடையில்—அவள் இல்லை என்பதுபோல் தலை அசைத்தாள். அமுதவல்லியுடன் வாழ்ந்தேன். அவளைக் கைவிட மனம் இல்லாமல்தான் இருந்தேன். ஆனுல் இப்போது அவள் இருக்கும் திசையும் பார்க்கமாட்டேன்" என்ருன்.

அவள் நன்றியுணர்ச்சியுடன் அவனை நோக்கினுள்.

மறுபடியும் அவன் தொடங்கினுன். உன்மேல் எழும் பரிதாபம் காரணம் என்று நினைத்துவிடாதே. என்மேலே எழும் அக்கறைதான் காரணம். ஆமாம் நான் இனிமேல் தூயவனுக—வெளித் தோற்றத்திலாவது—இருக்கப் போகின்றேன். அதனுல் நீ அஞ்சவேண்டாம்" என்ருன்.

அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ருலும் அமைதியாக அவனோடு ஒட்டி உட்கார்ந்திருந்தாள். அவனும் அவளை விலகிப் போகச் சொல்லவில்லை.

மறுநாள் ஞானசம்பந்தன் சுறுசுறுப்பாக விளங்கினுன். இங்கும் அங்கும் போனுன், இவரையும் அவரையும் கண்டு பேசினுன்.

பத்து நாட்கள் அங்கே கழித்தனர். பக்கத்திலே இருந்த வேடந்தாங்கலில் மணப்பெண்ணின் சிறிய தந்தையின் வீடு இருந்தது. அங்கு இவர்களை அழைத்துச் சென்று இரண்டு நாள் விருந்து வைத்தனர்.

அந்த இரண்டு நாட்களும் அந்த ஊரின் ஏரியையும், அதற்குள்ளே அடர்ந்திருந்த மரங்களையும், மரங்களின்மீது பரந்திருந்த பறவைகளின் கூட்டத்தையும், அவற்றின் எச்சத்தால் நிரம்பி இருந்த நீரையும், அவை தந்த நெடியையும் நுகர்ந்தவாறு கழித்தான்.

பின்னர் மாத்தூருக்கு வந்து குடும்பம் தொடங்கினர். பெரியசாமியும் சிவகாமியம்மாளும் மேற்பார்வை பார்த்து வந்தனர்.

★

பதினைந்து ஆண்டுகள் ஓடி மறைந்தன. இந்தக் காலத்தின் ஓட்டத்தில் விளைந்த மாற்றங்கள்தான் எத்தனை! நேற்றுப் பார்த்தது இன்று இல்லை; இன்று இருப்பது நாளை இராது மாறி மாறி வருவது உலகத்தின் இயற்கையும் நியதியுமாக இருக்கின்றது. இல்லாத ஒன்று பிறக்கின்றது. பிறந்த ஒன்று வளர்கின்றது. பால் திரிகின்றது, தயிராக. அதைப்போலத்தான் உலகமும்.

ஞானசம்பந்தனின் வாழ்க்கையில் இந்தப் பதினைந்து ஆண்டுகள் எத்தனையோ மாற்றங்களையும்-புதிய வாழ்க்கை முறையையும் உண்டாக்கிவிட்டது.

மாத்தூரில் மதிப்பு மிக்க பெரிய மனிதனுக ஞானசம்பந்தன் ஆனுன். பெரியசாமியும் சிவகாமியம்மாளும் பெற்ற மகனுடைய பெருந் திருவிழாவைக் கண்டு கண்ணை மூடினர். மூடிய கண் மண்ணுகிப் பல ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்தக் காலத்தில் நடந்த கதையை அவரவர்கள் வாயால் கேட்டால் தான் ஒளிக்காமல் மறைக்காமல், திரிக்காமல் எடுத்துச்சொல்வர். கேட்போம்:

நம்பவே முடியவில்லையே என்னுல் பதினைந்து ஆண்டுகள் பறந்து விட்டிருக்கின்றனவே. நேற்றுப்போல இருக்கிறது, ஒய்யார விலாஸ் மாடியில் 'மூலை'யிடம் பேசிவிட்டு அமுதவல்லியை அடைந்தது. ஆனுல் இன்று அதைச் சொன்னுல் யார் நம்புவார்கள். இன்றுதான் மாத்தூரில் மதிப்பு மிக்கவனுய் விளங்குகின்றேனே. யார் நம்பினுல் என்ன நம்பாவிட்டால் என்ன என் மனம் நம்புகின்றது. இடித்து இடித்துக்காட்டுகின்றது. என்ன செய்வது. என் வாழ்க்கையே அப்படி ஆகிவிட்டது.

ஆசைப்பட்டு அமுதவல்லியின் கரம் பிடித்தேன். ஆனுல் பிடித்த அந்தக் கையை உதறிவிட்டு எங்கோ மலைவையாவூரில் பிறந்த ஒரு பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் போட்டேன். போட்டு என்ன பயன் ஆசைக்கு ஒரு குழந்தை கொஞ்சிப் பேச ஒரு கொழுந்து, மழலை கேட்க ஒரு மகனே மகளோ இல்லை. ஊரிலே மட்டும் பெரிய மனிதன் என்ற பெயர் இருக்கிறது. புகழ் இருக்கிறது. செல்வம்கூட இப்போது சேர்ந்திருக்கிறது. ஆனுல் என் ஆசை தணிக்க ஒரு மகன் இல்லை. உண்மையிலே இல்லையா. ஏன் இல்லை என் மகன் இருக்கின்ருன். ஆனுல் உலகம் இன்று அவனை என் மகன் என்று சொல்லவில்லை, நான் சொன்னுலும் ஏற்றுக் கொள்ளுமோ என்னமோ சென்னைப்பட்டினத்தில் எங்கோ ஓரிடத்தில் அவன் வளருகின்ருன். அவன்தான் வளருகின்ருன்; அவனைப் பெற்றெடுத்து என்னிடம் கொண்டு வந்து காட்டி முறுவலித்த அமுதவல்லி மண்ணுகிவிட்டாள். ஆனுல் அந்த அருணுசலம் என்னை மண்ணைத் தின்னும் செதில்போல் இன்னும் அரித்துக்கொண்டிருக்கின்ருன். அந்த மகனை வளர்க்கும் செலவுக்கென்று திங்களுக்கு இவ்வளவு என்று அனுப்பிக்கொண்டுதான் இருக்கின்றேன். அதோடு சரி. அந்தக் குழந்தையை எடுத்துக் கொஞ்சவோ, குழந்தை சிறுவனுனபோது அவனுடன் விளையாடவோ எனக்கு வாய்ப்பு இல்லாமற் போனது. இப்போது அவன் எப்படி வளர்ந்து வாலிபனுக இருக்கின்ருன் என்பதைக் கூட நான் பார்க்கவில்லை. ஆனுல் அந்த ஆசையை அடக்கிக் கொள்ளத்தான் ஒரு வழி கண்டு பிடித்துவிட்டேனே. அதோமேல் உதட்டில் சின்னக் கருப்புக் கோடுபோல் அரும்பும் மீசையோடு ஆவலோடு என்னிடம் வருகின்ருனே வேலய்யன் அவனைத்தான் நான் மனதிலே மகனுக நினைத்திருக்கின்றேன். அது யாருக்குத் தெரியும்? எப்படித் தெரிவிக்கமுடியும்?

ஊரில் எல்லோரும் அவனை நான் அன்பாக வளர்ப்பதைப் பார்த்து வியப்படைகின்ருர்கள். ஞானசம்பந்தனின் உள்ளத்திலே என்ன கனிவு என்ன அன்பு என்று பாராட்டுகின்ருர்கள். யாரோ அனுதைப் பிள்ளையை எடுத்து வளர்க்கின்றேன் என்று பாராட்டுகின்ருர்கள்.

வேலய்யன் அனுதைப் பிள்ளைதான் ஆனுல் ஏன் அவனை அப்படி வளர்க்கின்றேன்? என் மனதிலே மண்டிக்கிடக்கும் ஆசையை அடக்கிக்கொள்ளத்தான் அவனை வளர்க்கின்றேன்.

எனக்கென்று ஒரு மகன் பிறக்கவில்லை. ஆனுல் என் இரத்தத்தில், சதையில் ஊறிப் பிறந்த ஒருவனை என் மகன் என்று சொல்ல இந்த உலகம் ஒப்பவில்லை. வேறு நான் என்னதான் செய்வது? அனுதையாகக் கண்ட வேலய்யனைத்தான் அன்பாக வளர்க்க வேண்டும்.

அன்று முதன் முதலாக அவனைப் பார்த்தபோது என் மனதில் தோன்றிய அதிர்ச்சிதான் அவனை அழைத்துக் கொண்டு வந்து வளர்க்கத் தூண்டியது.

மாலை ஐந்து மணி இருக்கும் கோவில் மண்டபத்தில் எழிலனுடன் நான் புலிக்கோடு ஆடிக் கொண்டிருந்தேன். 'அய்யா' என்று அவன் குரல் கொடுத்தான். நிமிர்ந்து பார்த்தேன்.

கிழிந்த சட்டையுடன், பரட்டைத் தலையும் வாடிய முகமுமாக அவன் நின்றிருந்தான். என் மனம் உடனே குழைந்தது அவன் ஏழ்மையைக் கண்டு.

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

ஆனால் யார் தளபதியாரைத் தட்டிக் கேட்பது. அரசர் ஒருவரே அதட்டிக் கேட்க முடியும். அவரோ கூட்டம் கலையட்டும்; தனிமையில் பேசலாம் என்று நினைத்துக்கொண் டிருந்தார்.

அப்பொழுதுதான் குகைவிட்டுக் கிளம்பிய புலியோ, சிகை சிலிர்த்தெழுந்த ஆண் சிங்கமோ என உள்ளே நுழைந்தான் இளமாறன். மன்னரைக் கண்டதும் 'கொற்றம் வாழ்க! குடிவாழ்க! அரசே! தகாத வார்த்தைகளை என் தந்தைமீது தொடுத்தாராமே தளபதியார். காரணம் கேட்க வந்திருக்கிறேன்' என்றான்.

"பொறு! இளமாறு! நடந்த விஷயத்தைப் பற்றி விசாரிக்கிறேன் அவசரப் படாதே!"- விபரீதத்தை விரும்பாத வேந்தரின் அரவணைப்பு இது.

"புண்ணான என் தந்தை படுக்கையிலே; பொங்கி எழாமல் எப்படி மன்னா பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? எங்கள்குடும்ப உறைவாள் அதோ கறைபடிந்து கிடக்கின்றது. அதன் மூலமே களங்கத்தைத் துடைத்துக் கொள்ள விரும்புகிறேன் மன்னா!"

"இளங்கன்று பயமறிய வில்லை கொற்றவா! கற்ற பாடமோ சொற்பம். அதை என்னிடமே காட்டத் துடிக்கிறான், துள்ளிவரும் ஆபத்தை உணராமல், குலரத்தமல்வா, சிறிது கொதிக்கத்தான் செய்யும். மன்னித்து அனுப்பி விடுங்கள்"— மாவரையன் இளக்காரத்தொனி கொடுத்தான்.

"ஆமாம்...அந்த இடிக்கும் இதயமும், துடிக்கும் இரத்தமும்தான் இப்பொழுது உம் தடுக்கடக்கப் புறப்பட்டிருக்கின்றன... வாய்வீச்சு வேண்டாம் வீரரே, வாள்வீச்சு தேவை!"- அரண்மனைத் தூண்களெல்லாம் ஒருமுறை ஆடி ஓய்ந்தன, எதிரொலி கேட்டு!

'மன்னா!' கத்தினான் மாவரையன்!

'இளமாறு!' கண்டித்தார் மன்னர்!

'தடுக்காதீர்கள் அரசே! தளபதியாரைவிட திறமைசாலி ஒருவனை இந்நாடு பெற்றிருப்பதை தாங்கள் அறிய வேண்டாமா' என்று கூறிக் கொண்டே மூலையிலே கிடந்த வாளைக் கையில் எடுத்தான். முத்தமீந்தான். 'அப்பா! இதோ கிளம்பி விட்டது, பொல்லாங்குக் காரனைப் புண்ணாக்க, பொருமைக்காரனிடம் பதில் கேட்க, உங்கள் கத்தி' என்று வாளை நீட்டினான் தளபதியாரை நோக்கி.

இரண்டு வாட்களும் மோதின மின்னலும் இடியும் தோன்றின. ஆவேசமும் ஆத்திரமும் மாறனுக்குப் புதியதோர் சக்தியைக் கொடுத்தன. அவையே பிரமிக்கும் வகையில் வாளைச் சுழற்றினான். அவன் வாள் வீச்சைக் கண்டு திகைத்து சோர்ந்துவிட்ட மாவரையனின் மார்பில் உறைவாள் செருகியது. கறை கழுவப்பட்டது!

'வெற்றி! வெற்றி! என் தந்தைக்கோர் வெற்றி! நீதிக்குப் புறம்பாகாத வீரத்திற்கோர் வெற்றி! வந்த காரியம் முடிந்து விட்டது. மன்னவா! வைத்தியருக்கு ஆள் அனுப்புங்கள். வருகிறேன்! பெருமிதப் புன்னகையுடன் கூடத்தை விட்டு வெளியேகினான் இளமாறன்!

தள்ளாடி வீழ்ந்த மாவரையன் 'அரசே!... என் மகள்... குழலியை அழையுங்கள்... அப்படியே வேலாளனையும்... சீக்... கிரம்!' என்று முணங்கினான்.

'யாரங்கே! வைத்தியரை அழைத்து வா... அப்படியே குழலியையும் வேலாளனையும், வேறெதுவும் கூறாமல் அவசரமாக அழைத்து வருக'—அரசர் கட்டளையிட்டார் பணியாளனிடம்.

செய்தி மூவருக்கும் பறந்தது. மருத்துவர் கையைவிரித்துவிட்டார் அதிக இரத்தம் சென்று விட்டது என்று. 'அப்பா' என்றலறினாள் குழலி. மாவரையனோ, சாவின் வேதனையைக் கரங்களில் பிடித்துக் கொண்டு, வேலா...பழி தீர்த்துக் கொண்டு விட்டானடா பாதகன்... பரவாயில்லை...பழிதீர்க்க மகனென்று இல்லை எனக்கு...ஆனால் நீயிருக்கிறாய்...நீதான்...நீதான்..." என்று பேச முடியாமல் தத்தளித்தான்.

"யாரவன்?" ... இருவரும் ஏக காலத்தில் கேட்டனர்.

"யாரானாலும் என் விருப்பத்தை நிறைவேற்றுவீர்களா?"

சிறிது திகைத்தான் வேலாளன் பதிலிறுக்காமல். ஆனால் குழலியோ "கூறுங்களப்பா யாராயிருந்தால் என்ன ... அக்கரையில்லை...பெண்தானே என்று யோசிக்காதிர்கள்... எப்படியேனும் பழிதீர்க்கச் சித்தமாயிருக்கிறேன்...எங்கேயவன்? அப்பா எங்கே...இதோ ஆணையிடுகிறேன் ...என் கடமை தீருமட்டும் நான் திருமணம்கூட செய்துகொள்ளமாட்டேன்...சொல்லுங்கள் சீக்கிரம்"— இளமாறன் மூலம் தன் சபதத்தை சீக்கிரம் முடித்துக் கொள்ளலாம் என்ற தைரியத்தில் பேதை பதைபதைத்தநெஞ்சத்துடன் பேசினாள்.

"இள. .இளமாறன்...இளமாறன் அவன்...தான்"— மாவரையன் முடிக்கவில்லை. அதற்குள் இருவர் முகங்களும் வெளுத்தன!

"இளமாறன்!...கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தலினிது என்ற குறளுக்கு ஆணுருவிலே அர்த்தம் கற்பிக்கும் அழகுருவம்!...நேரிழையே! கார் குழலியே! சூழ்நிலையை நினையாதிருக்கவழியொன்று கூறேன் என்று இது நாள்வரை என்னுடன் காமத்துப்பால் தீட்டிக்கொண்டிருந்தவன் நாளை கரம்பிடித்து கட்டிலறையில் வைத்து கொஞ்சப்போகும் கணவர் ...அவரைப் பழிவாங்குவதா... அய்யோ ...என் காதல்! ஆணை வேறு செய்துவிட்டேனே...காதலா கடமையா?" நெஞ்சம் குமுறி, விழிகள் வற்றாக் குளமாயின குழல் மொழிக்கு!

"இளமாறன்!... அவனோடு முட்டிக்கொள்வது மலையோடு முட்டிக் கொள்வதாயிற்றே...அவனை எதிர்ப்பதா...வெற்றி கிட்டுமா?...எப்படி சபதம் செய்து தருவது" இப்படித் திகைத்தான் மாணக்கன் வேலாளன்!

"என்ன யோசிக்கிறாய் வேலா! இதற்குத்தானா பெற்ற மகனிலும்... உற்ற மகனாக அன்பு பொழிந்தேன் ...கைமாறு இதுதானா?...என் இரத்தம்...நாதியற்றுப் போய்விடுமா... இளைஞனிடம் தோல்வி...வெட்கம் ...இந்த மனவேதனையிலே நான் இறந்து விடவேண்டுமா ... என்னம்மா குழலீ...மௌன விரதமா? நீ? காதலன் என்பதற்காக...கடமை பிறழப்போகிறாயா...உன் வாக்கு... காற்றுக்கா?...அவமானம்...எனக்கு ...குழலீ!" மேலும் பேசமுடியவில்லை அவனால். இமைகள் மூடியும் திறந்து கொண்டிருந்தன மெதுவாக. மூச்சு தட்டுத்தடுமாறி வந்துகொண்டிருந்தது.

'அப்பா' என்றலறி அவன்மீது விழுந்துகதறினாள்...'கவலைப்படாதீர்களப்பா! கடமைதானப்பா எனக்குப் பெரிது...காதலல்ல. இதோ தங்கள் இரத்தத்தைத் திலகமாக அணிந்து நான் செய்யும் சபதம்! தங்களுக்குச் சாவுக்குழி தோண்டியவரைப் பழி வாங்காமல் விடேன்...இது சத்தியம்!"

மாவரையனின் உயிர் இவளது வார்த்தைகளுக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தது போலும்! மயான அமைதியைக் கிழித்துக் கொண்டு குழல் மொழியின் அலறல் எங்கும் எதிரொலித்தது!

★

நாட்டிலே இச்சம்பவம் காட்டுத் தீயைப்போலப்பரவியது. இதற்குள் குன்றத் தோளரும் கண்களை மூடி விட்டார்! இளமாறனோ குழலியின் சபதத்தைக் கேட்டுத் துடித்தான். அவள்பழிவாங்கிவிடுவாளோ என்ற பயத்தில் அல்ல; இனி தன்னைத் தேடும் கண்ணைக் கண்டு காதல் பேச முடியாதே என்றுதான்!

கொள்ளையரின் கொட்டத்தை இளமாறன், வேலாளன் தலைமையில் சென்ற இரு அணிகள் அடக்கின. பிரதம தளபதியாக யாரை நியமிப்பது என்று அரசர் பல நாள் யோசித்தும், முடிவு காணாமல் நியமனத்தைஒத்திப்போட்டுக்கொண்டு வந்தார்.

வேலாளனோ,மாவரையன் மடிந்துவிட்டான், குழல்மொழி இளமாறன் மீது வர்மம் கொண்டு விட்டாள், எனவே அவளை எப்படியும் வசியப்படுத்தி, மந்திரிமகன், எதிர்காத்ல தளபதி என்ற செல்வாக்கிலே மணந்துகொள்ளலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டு, வளைய வளைய வந்தான் குழல்மொழியிடம். அவளோ சிறிதும் வளைந்துகொடுப்பதாகக் காணோம்.

குழலிக்கு மாறனிடத்தில் உள்ள காதலும் கனிவும் எப்படிக்குறைய முடியும். பால்யநட்பா, 'பட்'டென்று அறுந்துவிட? பருவ நட்பாயிற்றே! தினம் தினம் புழுங்கிப் புழுங்கிச் செத்து எழுந்தாள். சகல விவரமும் அரசர் தந்திருந்தும், தந்தை செய்தது தவறு என்று தெரிந்திருந்தும், எங்கே தன் கடமையில் இருந்து தவறினால், வாக்கு புரண்டால் ஊர் எள்ளி நகையாடுமோ என்ற அச்சத்தில், தன் வரட்டுக் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல், விடாப்பிடியாக இருந்தால்தான் கடல் இரைச்சலுக்கும் காட்டகத்து கூச்சலுக்கும் இடையில் அகப்பட்டுத் தத்தளித்துக்கொண்டிருந்த அவளுக்கு விடிந்தபொழுதெல்லாம் வேதனைப் பொழுதுகள்தாம்!

இதற்கிடையில் அரசர் பட்டத்திற்கு வந்த வெள்ளிவிழா, கோலகலமாகக் கொண்டாடப்பட்டது. அச்சமயம் அவரவர் விருப்பங்களை தெரிவிக்க அரசர் சம்மதம் தந்தார். ஒவ்வொருவர் முறையும்முடிந்தன பிறகு, மௌனமாக இருந்த குழல்மொழி "அரசே! நான் செய்திருக்கும் சபதம் அனைவருக்கும் தெரிந்ததுதான். இருந்தும் என்சபதத்தை நிறைவேற்றி வைக்க, என் தந்தையை சாவுலகிற்கு அனுப்பியவரை எதிர்த்து நிற்க, துக்கச்சின்னமாக என் முகத்தை மறைத்திருக்கும் இக்கருப்புச் சல்லாத் துணியைக் கிழித்தெறிய, என் மோன நிலையை அழித்தொழிக்க ஒரு வீரர்கூட நம் பட்டாளத்தில் கிடையாதா? வேதனையோடு வெட்கப்படுகிறேன் மன்னவா!...கடைசியாக நான் கூறுவது இதுதான். எந்த வாள் எந்தன் சபதத்தை நிறைவேற்றி வைக்கின்றதோ அந்த வாளுக்கே மாலை சூட்டத் தயாராக இருக்கிறேன்" என்றாள் பாதி அழுகையும், பாதி வீரமும் கலந்த குரலில்.

இளமாறன் உட்பட அனைவருமே திகைத்துவிட்டனர். இதைவிட்டால் வேறு சமயம் வாய்க்காது என்று எண்ணிய வேலாளன் கம்பீரமாக எழுந்து "அரசே! குழல்மொழியார் மிகவும் மோசமாக நினைத்து விட்டார். இதோ நிற்கிறேன் அவர்

தி. மு. கழக

மத்திய செயற்குழுக் கூட்டம்

தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் 6-6-58 வெள்ளியன்று காலை 10-மணிக்குச் சென்னை-நுங்கம்பாக்கம், 'அவின்யூ ரோடு', 9 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்.

தலைமைக் கழகம் (தி. மு. க.)

நந்திக் கலம்பகத்தில்...!

பல்லவப் பேரரசனை மூன்றும் நந்திவர்மப் போத்தரையன் மீது பாடப்பெற்றதே 'நந்திக் கலம்பகம்' என்பதை இலக்கிய உலகிலுள்ளோர் யாவரும் அறிவர். தமிழ்மொழியில் எழுந்த முதற்கலம்பகமும் இதுவே என்பது அறிஞர் பலரின் எண்ணமாகும்.

நிற்க, அண்மையிலே 'நந்திவர்மன் காதலி' என்ற நவீனமொன்றைக் காண நேர்ந்தது. அதை எழுதியவர் திரு. ஜெகசிற்பியன் அவர்களாவர். அவர் தன் நூலின் முன்னுரையில் கூறியிருப்பதுபோலவே, வரலாற்றுக்கும் கற்பனைக்கும் சரியளவு விழுக்கோடு (விகிதாச்சாரம்) தந்து அந்நவீனத்தைச் சமைத்திருக்கிறார். கூறப்புகின், அவரது கருத்துப்படி 'பெரிய புராண'த்தின் அடிப்படையிலே அவர் நவீனம் நடை போடுகின்றது என்பது தெளிவுறும். நவீனமோ, நந்திக் கலம்பகத்தினைக் குறித்துக் கர்ணபரம்பரையாக வழங்கி வரும் செவிவழிக் கதையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது.

சிற்றிலக்கியமாகவே, இலக்கிய அறிவு சான்றவர்களின் இடையேமட்டுமே உலவிவரும் நந்திக் கலம்பகத்தை - அது எழுந்த கதையை நவீனமாக ஆக்கிக் கொடுத்ததின்மூலம், எழுத்தறிவுள்ள யாவரிடையேயும் நந்தியின் தமிழார்வத்தை வெளிப்படுத்திக் காட்டிய நவீனத்து ஆசிரியர்தம் முயற்சி பாராட்டற்குரியதே. எனினும் அந்நவீனம் குறித்து சிலவற்றை ஈண்டு என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை.

கற்பனையும் வரலாற்றுடன் கலந்தால்தான், எழுத்து வெற்றி பெறும் என்று ஆசிரியர் கருதுவது, தமது புகழுக்கு ஒரு சாதனமாக அமையலாம். ஒரு சிற்றிலக்கியம் எழுந்த வரலாற்றை அடிப்படையாக வைத்துப் பெருங்கதை புனைவது, உண்மையிலே வரலாற்றை அது அறியாதார் மத்தியிலும் பரப்புவதற்குப் பெருந்துணை புரியும். எனவே இயலும்வரை வரலாற்றுக்குறிப்புகளுக்கு நிறைய பங்கு தருதல் நன்மை பயக்கும். இந்நூலாசிரியர், கர்ணபரம்பரையாக இந்நந்திக்கலம்பகத்தைப் பற்றி வழங்கி வரும் கதையினை மட்டுமே கருத்திலிருத்தியுள்ளார் எனத் தெரிகிறது. 'அபிதான சிந்தாமணி'யிலே கூறப்படுகின்ற கதை, இக்கதையினின்றும் சிலவற்றில் மாறுபடுவதை நோக்கலாம். இதை நூலாசிரியர் பார்வைக்கு வைக்கின்றேன்.

நிற்க, தமிழார்வங் கொண்ட நந்தியைத் தமிழாலேயே ஒழித்துக் கட்டவே இக்கலம்பகம் பாடப்பெற்றதாகக் கதை. இச்சூழ்ச்சி, நந்தியின் மாற்றாந்தாய்க்குப் பிறந்த நான்கு சோதரர்களில் ஒருவரால் கைக்கொள்ளப் பெற்றது என்பது கதைவழி தெரிகின்றது. இப்படிச் செய்தவர் 'காடவர்'தான் என்பது நூலாசிரியர் எண்ணம். இதற்குச் சான்றாக,

'காடவர்க்கு முன்தோன்றல் கைவேலைப் பாடி...' என்றக் கலம்பகப் பாட்டொன்றின் வரியைக் காட்டுகின்றார். இந்தக் 'காடவர்' நந்திவர்மனின் தம்பியின் 'பெயர்(!)' என்றும், 'முன்தோன்றல்,' நந்திவர்மனைக் குறிக்கின்றதெனவுங் கூறுகின்றார். இது சரியாக இருக்க முடியாது. தமிழ்ப் புலவனொருவன் தனது பெயரை—அதுவும் சிறப்பு அதனால் அதிகமாகும் என்ற நிலையில் இவ்வளவு 'துணிச்சல்' இதிலே காட்டமாட்டான். 'அவை அடக்கத்'திற்குப் பேர் போனவர்களாயிற்றே தமிழ்ப் புலவர்கள்! இந்த மேற்படி வரியிலே வரும் 'காடவர்' என்ற சொல், பல்லவர் எனப் பொருள்படும். மேலும், தன்னையே அப்புலவர் கூறிக் கொண்டதாக வைத்துக் கொண்டாலும், 'காடவன்' (அது அவர் இயற்பெயராக இருந்திருந்தால்) என்றுதான் குறிப்பிட்டிருந்தாரேயன்றி, 'காடவர்' என்று 'அர்' சிறப்பு விகுதியினைச் சேர்த்துக் கொண்டிருக்க மாட்டார் என்பதே அனைவரும் ஒப்பும் உண்மை. தவிரவும், காடவர் எனுஞ் சொல், இங்கே பன்மையிலே 'பல்லவர்களை'யே குறிப்பதாகும்.

இதே பாடலை வைத்து, நந்திக் கலம்பகத்தாசிரியர் நந்திவர்மனின் இளவல்தான் என்று உறுதியோடு கூறுகின்றார் இந்நவீன ஆசிரியர். தம்பியின் அவலக்குரலே எதிரொலிப்பதாக அவர் இப்பாட்டினை மாற்றுக் கண்ணோட்டத்துடன் பார்த்திருக்கின்றார் எனத் தெரிகிறது.

கலம்பகத்தின் ஆசிரியர், நந்திவர்மனின் 'கனிஷ்டன்' (தம்பி) தான் என்று, புரசைப்பாக்கம் விவேக விளக்க அச்சகப் பதிப்பிலே (இற்றைக்கு 82 ஆண்டுகட்கு முற்பட்டது) குறிப்பிடப்பட்டிருப்பதாகத் திரு. ரம்போலா மாஸ்கரனஸ் அவர்கள் கட்டுரையொன்றில் எடுத்துக் காட்டியிருக்கின்றனர். அன்னவரே பிறிதொரு இடத்தில், வேறோர் பாடலைச் சான்று காட்டி, உடன்பிறந்த பாசத்தின் அழுகுரலேதும் புலவரின் பாட்டில் எதிரொலிக்கக் காணோம்; ஆனால் வர்மனின் மறைவின்போது, புலவர் பாடியக் கையறுநிலைப் பாட்டு, 'புலவன்-புரவலன்' தொடர்பையே ஒலிப்பதாக எழுதுகின்றார்கள். மேலும்,

'இந்தப் புவியில் இரவலர்உண்
டென்பதெல்லாம்
அந்தக் குமுதமே அல்லவோ
—நந்தி
தடங்கை புரவலனைத்
தண்தமிழால் பாடி
அடங்கப் புரவலர் ஆனார்.

இப்பாடலிலே உள்ள கருத்து, நந்தியின் தமிழ்ப் புரவலன்மையும் அப்படிப்பட்ட புரவலனை இழந்ததோர் தமிழ்ப் புலவனின் ஆறாத ஏக்கத்தையும் எடுத்துச் சொல்கின்றது.

இறுதியிலே ஒரு இடம்... பாடல்கள் அனைத்தையும் கேட்க வேண்டுமென்று வர்மன் பிடிவாதம் பிடித்தபோது, புலவர் தமது நூறு பாடலையும், பச்சை ஓலையில் நூறு பந்தரமைத்து அதிலிருந்து மன்னன் ஒவ்வொன்றாய்க் கேட்க வேண்டுமென விதியிடுகிறார். இறுதிப் பாட்டை மட்டும் இடுகாட்டில் பாடுவதாகவும், பிணச் சடங்குகளுடன் மன்னன் சவம்போல் படுத்திருந்து அதைக் கேட்கவேண்டும் என்றும், பிறகு அவன்மேல் தீ பரவ, உயிர் பிரியுமென்றும் அறிவிக்கின்றார்.

ஆனால் இந்த நவீனத்தில் அதனாசிரியர், இந்த எண்ணிக்கையைத் தொண்ணூறு என்று இரண்டு இடங்களிலே குறிக்கின்றார். ஏட்டுச் சுவடி அச்சு வெளியீட்டிலே காணப்பெற்ற பாடல்கள் 90 என்ற காரணத்தால் ஒருவேளை அவர் இவ்வாறெழுதியிருக்கலாம். ஆனால் அதுகூட, அடிப்படையாக அவர் எடுத்துக் கொண்ட கதைவழிக்கு மாறுபடுகின்றதே என்று வருந்த வேண்டியுள்ளது. தவிர, கிடைத்த பாடல்களின் எண்ணிக்கையை வைத்து இவ்வாறு நவீனத்தில் 90 என எழுதியிருக்கிறார் எனக் கொண்டாலும், வித்துவான் திரு. ல. சண்முகசுந்தரம் அவர்கள் குறித்தவாறு, 116 பாடல்கள் கிடைத்துளதே, இதற்கென்ன செய்வது? 'பன்னிரு பாட்டியல்' என்ற இலக்கண நூலின்படி, மன்னர் மீது பாடப்பெறும் கலம்பகம் 99 பாடல்களை மட்டுமே அல்லவா பெற்றிருக்க வேண்டும்? கர்ண பரம்பரைக் கதை வழி கேட்டால், நூறு பாடலெனத் தெரிகின்றது. கிடைத்திருப்பது அதைவிட அதிகம். எனவே இந்த இடர்ப்பாட்டிலே, செவிவழிக் கதையினை ஏற்ற நூலாசிரியர், அக்கதையைப் பின்பற்றியே நூறு பாடல்களாகக் கொண்டிருக்கலாம் என்பதே நம் கருத்து.

–தெசிணி,
பி. காம். (ஆனர்ஸ்)